2016 ஜனவரி 22]

28—

மாவட்ட மைய நூலகம்

***49301 திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் மாவட்ட மைய நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரத்திலுள்ள கிளை நூலகம் முழுநேர நூலகமாக தற்போது செயல்பட்டு வருகின்றது. ஏற்கெனவே, தஞ்சாவூர் மாவட்ட தலைமையிடத்தில் மாவட்ட மைய நூலகம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாலும், ஒரு மாவட்டத்திற்கு, ஒரு மாவட்ட நூலகம் மட்டுமே அமைக்க வழிவகை உள்ளதாலும், கும்பகோணத்தில் பிறிதொரு மாவட்ட மைய நூலகம் அமைப்பதற்கு வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியில் தமிழ்ச் சுவடிகளுக்கு நல் வடிவம் வழங்கிய நூலகச் சிற்பி திரு. உ.வே.சா. அவர்கள், உலகம் போற்றும் கணித மேதை திரு. இராமனுஜம் அவர்கள், இரட்டை நாக்கு,* silver tongue *படைத்த சீனிவாச சாஸ்திரி அவர்கள், திருபுறம்பியம் ஊராட்சியில் பிறந்த சரித்திர கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு. சதாசிவம் பண்டாரத்தார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்போடு அண்ணன் என்று அழைத்த சுயமரியாதைச் சுடர் திரு. கே.கே. நீலமேகம் போன்ற சான்றோர்கள் வாழ்ந்த குடந்தையில் சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக பழமை பாராட்டும்* W.Porter *என்ற ஆங்கிலேயர் முதல்வராகப்*

பணியாற்றிய தென் இந்திய Cambridge எனப்படும் குடந்தை கல்லூரி, W.Porter என்பவரால் திறக்கப்பட்டு, 150 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிற நல்ல பள்ளிகளில் ஒன்றான நகர மேல்நிலைப் பள்ளி, ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கும், நான் கல்வி பயின்ற சிறியமலர் உயர்நிலைப் பள்ளி உள்ளிட்ட பல பள்ளிகளும், 20-க்கும் மேற்பட்ட கல்லூரிகளும், மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் திரு. ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் உரையாற்றிய குடந்தை சாஸ்த்ரா கல்லூரி, "எழுமின், விழிமின்" என்ற வாசகத்தைத் தந்த இளைஞர்களின் எழுச்சி நாயகனாக விளங்கும் சுவாமி விவேகானந்தர் வருகை தந்து உரையாற்றிய சிறப்புப் பெற்றது கும்பகோணம். கும்பகோணம் மாவட்ட அந்தஸ்த்தைப் பெற்று வருகின்றது என்பதற்கு உதாரணமாக, மாவட்ட மருத்துவமனைகள், மாவட்ட நீதிமன்றங்கள், மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகம், மாவட்ட கால்நடை அலுவலகம், மாவட்ட மோட்டார் வாகன அலுவலகம், மண்டல அரசு போக்குவரத்துக் கழகம் போன்ற அலுவலகங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆகவே, வருங்காலத்தில் மாவட்ட அளவில் மின்னணு நூலகம்-Digital Library ஒன்றைத் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரத்தில் உள்ள கிளை நூலகம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, முழுநேர நூலகமாக செயல்பட்டு வருகின்றது. இந்நூலகத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 8,562 ஆகும். நூல்களின் இருப்பு 53,825 ஆகும். இங்கு சராசரியாக நாளொன்றுக்கு 210 வாசகர்கள் வருகை புரிகின்றனர். இந்நூலகம் குடிமைப் பணி, குறிப்பு உதவி, நூலகம் வாசிப்பு, மகளிர், சிறுவர்கள் படிப்பதற்கான நாளிதழ் மற்றும் பருவ இதழ் ஆகிய பிரிவுகளுடன் போதிய இட வசதியுடன் செயல்பட்டு வருகின்றது.

முற்பகல் 11-10

தஞ்சாவூர் மாவட்ட தலைமையிடத்தில் மாவட்ட மைய நூலகம் 33,373 உறுப்பினர்களுடன் 1,91,041 நூல்களுடன் தற்போது

2016 ஜனவரி 22]

செயல்பட்டு வருவதால், ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட மைய நூலகம் மட்டுமே அமைக்க வழிவகை உள்ளதால், கும்பகோணத்தில் பிறிதொரு மாவட்ட மைய நூலகம் அமைக்க வழி இல்லை. இது அரசின் கொள்கை முடிவு என்ற காரணத்தினால், வருகின்ற காலங்களிலே அரசினுடைய கொள்கை முடிவுக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை பரிசீலினையில் எடுத்து, அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கையாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கொள்கை முடிவை தயவுசெய்து மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சோழப் பேரரசின் தலைநகரமாம் தஞ்சை நகரில் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஓலைச்சுவடிகள், அச்சு நூல்கள், சரபோஜி மன்னரால் வழங்கப்பட்ட நூல்கள் என பல்துறையைச் சார்ந்த ஒரு இலட்சம் நூல்களைக் கொண்ட பொக்கிஷமாக சரஸ்வதி மஹால் நூலகம் உள்ளது. மற்றும் தமிழ் பல்கலைக்கழகத்தில் பாரம்பரியம் மிக்க நூல்களைக்கொண்ட பெரிய நூலகமும் உள்ளது. நான் பிறந்த சாக்கோட்டையில், 1946-ல் தந்தை பெரியார் அவர்களால், திரு. கே.பி. சாமி மற்றும் எனது தந்தை திரு. கணபதி இன்னும் பல பெரியோர்களால் தொடங்கப்பட்ட படிப்பகம் படிப்படியாக வளர்ந்து தற்பொழுது 15,000 நூல்களைக் கொண்ட நவீன நூலகமாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது. நான் சுய மரியாதைக் குடும்பத்தின் வழிவந்தவன் என்ற முறையில் சுய மரியாதைக் குடும்பத்தின் வழிவந்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்; விதியை மதியால் வெல்லலாம் என்பார்கள். அந்த மதியைப் பெறுவதற்கு அரசின் விதிமுறைகளைத் தளர்த்தி மாவட்ட தலைநகர் என்ற அளவுகோலை வைக்காமல் நூலகம் தொடங்கிட வேண்டும். வேளாண்மைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையம், கல்வியியல் கல்லூரி, மாவட்ட விளையாட்டரங்கங்கள் போன்ற கல்வி சம்பந்தமான பல கோரிக்கைகளை நான் சட்டமன்றத்தில்

வைத்திருக்கிறேன். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் பயின்ற யானையடி பள்ளி அமைந்துள்ள கும்பகோணத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பெயரால் இன்டர்நெட் வசதி உள்ளிட்ட நவீன வசதிகள் கொண்ட புதிய Digital library-*மின்னணு நூலகம் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? இதனைக் கேட்கிற நான் அன்பழகன், கொடுக்கிறவர் மாண்புமிகு வீரமணி அவர்கள்; வரலாற்றில் பெயர் உள்ளவர்கள்; தயவுசெய்து ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் பரிசீலனை செய்து, எதிர்வருகின்ற காலங்களிலே, கொள்கை முடிவினைத் தளர்த்துவதற்கு வழிவகைகள் இருக்கும்பட்சத்தில், தேவையான வழிவகைகளை உருவாக்கி, உறுப்பினருடைய கோரிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

மாணவியர் விடுதி

***56447—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—